26th August 1961]

நான் ஆலோசனை சொன்னேன். சர்க்கார் விதிகளை விதித்திருக்கும்போது, ஒன்றை ஒத்துக் கொண்டால் எல்லாவற்றையும்தான் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று. சம்பள வசதிகள் வேண்டுமென்றால், சர்க்கார் விதிகள்படி லீவு வசதிகளையும் குறைத்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப்படி ஒத்துக்கொண்டால், நாங்கள் சம்பள வசதிகள் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னேன். அதற்கு முன்னால், கோர்ட்டில் இருக்கும் காரணத்தினால், தொழிலாளிகள் எந்த விதமான ஒப்பந்தத்திற்கும் ஒத்துக்கொள்ளவில்லை.

Handloom Technological Institute

* 1419 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் கைத்தறி தொழில் நுட்ப கழகங்கள் எங்கெங்கே ஆரம்பிக்கப்பட்டுள்ளன ?

(இ) இனிமேல் எங்கெங்கே ஆரம்பிக்க உத்தேசம் ?

(உ) அவைகளில் குறுகிய கால பயிற்சி கொடுக்க உத்தேசம் உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Institutes of Handloom Technology have not been started in any place by the Government. There is, however, an Institute of Handloom Technology at Salem conducted by the All-India Handloom Board from 1st July 1960.

(*b*) There are no proposals to start such institutions in the near future.

(*c*) Does not arise.

Textile mills

* 1420 *Q.*—Sri M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any decision has been taken regardnig nationalisation of textile mills; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Disappearance of patient (Government General Hospital, Madras)

* 1421 *Q.*—Sri S. M. ANNAMALAI : } Will the Hon. the
Sri A. A. RASHEED : }

Minister for Revenue be pleased to state whether a woman patient disappeared from the General Hospital on 4th April 1961?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes. Sir. The woman patient was subsequently admitted and treated in the hospital from the 5th to 11th April 1961. She was discharged cured from the hospital on 12th April 1961.

Sri A. A. RASHEED : May I know, Sir, the circumstances of her disappearance from the hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU : காயத்திற்கு சிகிச்சை செய்து கொள்ள ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். பரிசீலனை செய்து, ஆபரேஷன் தியேட்டருக்கு அனுப்பினார்கள். அங்கே நிறைய ஆள்கள் இருந்ததால், காத்திருக்க வேண்டியிருந்தது. அதற்குள் அந்த அம்மா

[26th August 1961

கூட வந்திருந்த அம்மாளுக்கு காப்பி சாப்பிட வேண்டும் போல் இருந்தாற் போல் இருக்கிறது, அவர்கள் ஹோட்டலுக்குப் போனார்கள். இந்த அம்மாளும் கூடவே போனார்கள். காப்பி சாப்பிட்ட இடத்தில் ஆஸ்பத்திரி சீட்டை விட்டு விட்டார்களோ என்னவோ, திரும்பி வந்தபோது கேட்டில் அவர்களை விடவில்லை. அட்மிஷன் டிக்கட்டை தொலைத்து விட்டதால் அப்படியாகி விட்டது. நல்ல வேளையாக மறுநாள் அவள் புருஷன் அழைத்து வந்து விட்டார் ; அதன் பிறகு நாலு ஐந்து நாட்கள் அங்கேயிருந்து சிகிச்சை பெற்றார்கள்.

Sri S. M. ANNAMALAI : அமைச்சரவர்கள் அந்த அம்மாளின் புருஷன் மறுநாள் அழைத்து வந்ததாகச் சொன்னார்கள். அந்த அம்மாள் ஆஸ்பத்திரியை விட்டுப் போனதாக பத்திரிகைகளில் வந்ததன்பிறகு, போலீஸ் கொண்டுவந்ததாகச் சொல்லப்பட்டதே. அந்த அம்மாளுக்கு என்ன நோய் என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கத்திக் குத்துக் காயத்திற்காக வந்தார்கள். போலீஸ் ஒன்றும் இல்லை இதிலே........இதிலே ஒரு திருத்தம் செய்ய வேண்டிருக்கிறது. I am sorry, புருஷன் ஏற்படுத்திய கத்திக் குத்திற்காக வந்தாள் ; மறுநாள் அழைத்து வந்தது, தகப்பனார். (சிரிப்பு).

Sri S. M. ANNAMALAI : கத்திக் குத்துக் காயம் என்றால், மெமோ போட்டு, டாக்டர்கள் போலீசுக்கு தெரியப்படுத்தினார்களா ? அப்படிப் போலீசில் இருந்தால், போலீஸ் காவலில் இருந்து தப்பினது எவ்விதம் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : போலீசு உத்தரவு போட்டுச் செய்வதற்குள்ளாகவே, நல்ல வேளையாக மறுநாளே அந்த அம்மாள் அங்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார்கள்.

Sri K. VINAYAKAM : Sir, if a patient is brought to the hospital for treatment due to some injuries caused to her, are there not any strict measures to supervise or control the presence of the patient in the hospital till actually treatment is given? How does it happen that she could go away without anybody noticing or preventing her from going out?

The Hon. Sri M. A. MANICKAVELU : The bearer led the patient and after in forming the nurse-in-charge of the theatre, she went out, தாகம் எடுக்கிறது, காபி குடிக்கப் போகிறேன் என்றதால், விட்டு இருக்கிறார்கள். அவர்களிடம் அந்த அட்மிஷன் டிக்கட் இல்லாத காரணத்தினால், வந்த விபரீதம் இது. டிக்கட்டு இருந்திருந்தால் ஒன்றுமேயில்லை.

Sri V. S. MANIKKASUNDARAM : அந்த சம்பவம் குறித்து கிரிமினல் கேஸ் ஏதாவது ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : அது விஷயமாக தகவல் இல்லை.

Accident in moving bus

*1422 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it was a fact that a woman and child were thrown out of a moving bus in Madras City on 9th February 1961 because of a sudden jolt of the vehicle;